**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>O.S.No.175/2022</u>**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கிருஷ்ணமூர்த்தி |
| தகப்பனார் / கணவர் | .. | நடசே கவுண்டர் |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1ம் பிரதிவாதி மாணிக்கம், கண்ண கவுண்டரின் மகன் என்றால் சரிதான். மாணிக்கம் என்பவர் ஆனந்தன் மற்றும் சீனிவாசன் ஆகியோர்களுக்கு 1 ஏக்கர் நிலத்தை விற்றார். ராஜேந்திரன், ஆனந்தன் மற்றும் சீனிவாசன் ஆகியோர் மாணிக்கத்திடம் சொத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். என் சித்தப்பாவிற்கு மாணிக்கம், தனம், வனமயில் ஆகியோர் பிள்ளைகள் ஆவார்கள். மாணிக்கம் தன் தகப்பனாருக்கு வந்த பாகத்தை தான் விற்றார் என்றால் சரியல்ல. 1978 என் அப்பா நடேச கவுண்டர் மற்றும் அவரது தம்பி கூர் சீட்டு ஒன்றை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் இல்லை. என் அப்பா, சித்தப்பா கையெழுத்து தெரியுமா என்றால் தெரியும். நஞ்சை சர்வே எண்கள். 116, 173/7, 200/2, 77 மற்றும் 71/3 ஆகிய சொத்துக்களை என் அப்பாவிற்கு பிறகு நான் தான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். கிராம நத்தம் சர்வே எண்.1எ 1 வீடும் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். காலிமனையை கண்ண கவுண்டர் நடேச கவுண்டருக்கு எழுதி வைத்துள்ளார். என் அப்பாவிற்கு

மூன்று மகன்கள். என் அப்பாவிற்கு வந்த பாகத்தில் 1 ஏக்கர் அனுபவித்து வருகிறேன். என் அப்பாவும், சித்தப்பாவும் கூர் சீட்டு ஏற்படுத்தி சுமார் 45 வருடம் இருக்குமா என்றால் சரியல்ல. லட்சுமணன், மாணிக்கத்திடம் இருந்து 2 ஏக்கர் வாங்கினார். லட்சுமணன் மாணிக்கத்திடம் இருந்து கிரையம் சொத்து வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2 ஏக்கர் நிலத்திற்கு ஜக்குபந்தி ராமாஞ்ஜலு நிலத்திற்கு கிழக்கு, கண்ணாயிரம் நிலத்திற்கு மேற்கு, கிருஷ்ணமூர்த்தி நிலத்திற்கு வடக்கு, ஆனந்தன் நிலத்திற்கு தெற்கு என்று உள்ளது என்றால் சரிதான். லட்சுமணன் மேற்படி நிலத்தில் 25 செண்ட் கண்ணாயிரத்துக்கு விற்றாரா என்றால் விற்றுள்ளார். மேற்படி நிலத்தை லட்சுமணன், கண்ணாயிரமிடம் இருந்து வாங்கிவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2007ல் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கு 2022ல் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இன்று வரை பட்டா 298 லட்சுமணன் பேரில் தான் உள்ளது என்றால் சரிதான். அதை பார்த்து தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். மேற்படி பட்டா 2017 லட்சுமணன் பேரில் பட்டா மாற்றப்பட்டுள்ளது. அதில் எனது தரப்பு வா.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நடேச கவுண்டரும், கண்ண கவுண்டரும் பாக பிரிவு கூர் சீட்டு ஏற்படுத்திக் கொண்டு கண்ண கவுண்டர் பாகத்தினை அவர் மகன் மாட கவுண்டர் அனுபவித்து வந்து மாணிக்க கவுண்டர் இடம் இருந்து லட்சுமணன் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை நான் அனுபவித்து வருகிறேன். நான் அனுபவித்து வருவதாக சொல்வது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என் தந்தை எனக்கும், என் அண்ணாவிற்கும் ஏற்படுத்தி கொடுத்த ஆவணம் வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.2 சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.3 என் அண்ணன் கிரையம் கொடுத்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு உரிமையை இல்லாத சொத்துகளை எனக்கு, என்

அண்ணாவிற்கும் தான செட்டில்மெண்ட் செய்துகொடுத்தது செல்லத்தக்கது அல்ல அதன் அடிப்படையில் லட்சுமணனுக்கு சொந்தமான சொத்தில் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துகளில் உரிமை மூல ஆவணங்கள் லட்சுமணன் பேரில் தான் உள்ளது நான் இந்த வழக்கை தாக்கல் செய்ததே சட்ட செல்லாது என்றால் சரியல்ல. லட்சுமணனிடம் இருந்து பணம் பரிக்கும் நோக்கில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/– N. சுரேஷ்
**முதன்மை சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**